**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம்,**
**முன்னிலை : திரு. எம்.சார்லஸ் ஆல்பர்ட், பி.காம்., பி.எல்.,**
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், கரூர்.

திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 16–ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 –ஆம் நாள் திங்கட்கிழமை

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.2803/2023**
**CNR.No. TNKR-02-009678-2023**

| S.No | Description of Particulars | | |
|---|---|---|---|
| 1. | Name of the Court | : | JUDICIAL MAGISTRATE No.II COURT, KARUR. |
| 2. | Name of the Judge | : | Thiru.M.Charles Albert, B.Com., B.L.,<br>Judicial Magistrate No.II, |
| 3. | Case number along with CNR Number | : | CNR No. TNKR-02-009678-2023<br>Case No.S.T.C.2803/2023 |
| 4. | Complainant | : | **Sakthivel,**<br>S/o. Ramasamy,<br>No.993/4 – Muthunagar,<br>Gandhigramam North,<br>Pasupathipalayam,<br>Karur Taluk and District. |
| 5. | Alleged offences by the Complainant | : | U/s 138 and 142 of NI Act. |
| 6. | Name of the accused | : | **T. Valliyammal,**<br>W/o. Tamilarasan,<br>No.71/18 – Bharathidasan Nagar,<br>Om Sakthi Kovil Street,<br>Thanthonimalai Post,<br>Karur District. |
| 7. | Date of occurrence | : | 10.08.2020 |
| 8. | The date of report of complaint | : | 07.09.2020 |
| 9. | Date of arrest if any<br>and Remand | : | Nil |
| 10. | Date of release on bail | : | – |
| 11. | Period of remand of the accused | : | Nil |
| 12. | The date of final form/report in the Court. | : | Petition u/s 200 Cr.P.C. filed on 30.09.2020 before FTC @ ML., Karur, prima facie made out |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | and taken on file by FTC @ ML, Karur in S.T.C. No.514/2020 Subsequently transferred in this court by the Hon'ble CJM in R.O.C NO.18/2023/A1, Dated 01.07.2023 and taken on file in S.T.C.No.2803/2023 on 28.07.2023. | | |
| 13. | The date of committal of the case to the Court of Sessions. | : | Triable by the First class Magistrate offences only. | | |
| 14. | Date of questioning of the accused u/s 251(questioning in summons procedure cases) of the Code of Criminal Procedure 1973, | : | 23.08.2023 | | |
| 15. | Date of commencement of trial | : | 08.09.2023 | | |
| 16. | Date of examination in-chief and cross – examination of a witness. | : | | CHIEF | CROSS |
| | | | PW 1 | 08.09.2023 | 11.08.2025 |
| | | | PW2 | 10.01.2024 | 11.08.2025 |
| 17. | Filling of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts, except routine petitions like petitions under Section 317of the Code. | : | Crl.M.P. and M.P.No. | Date of Filing | Result |
| | | | Surrender petition filed by the accused in Crl.M.P.No. 2638/2023 | 16.08.2023 | Allowed 16.08.2023 |
| | | | Advance Hearingpetition filed by the accused in Crl.M.P.No. 2639/2023 | 16.08.2023 | Allowed 16.08.2023 |
| | | | Recall petition filed by the accused in Crl.M.P.No. 2640/2023 | 16.08.2023 | Allowed 16.08.2023 |
| | | | Petition filed by the accused u/s.311 Cr.P.C in M.P no. | 18.01.2024 | Allowed 18.01.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 03/2024 | | |
| 18. | Date of examination of the accused under section 313 of the code. | : | 18.01.2024 | | |
| 19. | Details of abscondance of an accused and his appearance/production, as the case may be; and | : | Nil | | |
| 20. | Grant of stay by superior courts and the results thereof. | : | Nil | | |
| 21. | Date of closure of trial | : | 09.03.2026 | | |
| 22. | Date of Service of copy of judgment to the accused | : | Since Accused not present, Copy of judgment is not served to Accused. | | |
| 23. | If any delay in this case, give explanation. | : | No | | |

******

| | |
|---|---|
| புகார்தாரர் பெயர் | **Sakthivel,**<br>S/o. Ramasamy,<br>No.993/4 – Muthunagar,<br>Gandhigramam North,<br>Pasupathipalayam,<br>Karur Taluk and District. |
| எதிரியின் பெயர் | **T. Valliyammal,**<br>W/o. Tamilarasan,<br>No.71/18 – Bharathidasan Nagar,<br>Om Sakthi Kovil Street,<br>Thanthonimalai Post,<br>Karur District. |
| புகார்தாரர் தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 |
| எதிரியின் பதில் | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி |
| புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் | திரு.N.பிரகாஷ், B.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.S.ராமசந்திரன், M.A., B.L., |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 30.03.2026 |

இந்த வழக்கானது இன்று வரையில் என் முன்பாக விசாரணைக்கும், எனது பரிசீலனையிலும் இருந்து வந்தும், இறுதியாக புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.பிரகாஷ், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகி எடுத்துரைத்த வாதத்திற்கு செவிமடுத்தும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராமசந்திரன், M.A., B.L., அவர்கள் ஆஜராகி இருந்த போதும், போதிய வாய்ப்பும் அளித்தும் எதிரி தரப்பில் யாதொரு சாட்சிய சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தாததால், இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் 30.03.2026 ம் தேதி இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

1) இவ்வழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், பிரிவு 138–ன் கீழ் காசோலை மோசடி குற்றத்திற்காக எதிரியை தண்டிக்கக்கோரியும், நஷ்டஈடு செலுத்தகோரியும், புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

<u>2) புகாரின் சுருக்கம்:–</u>

2.1) புகார்தாரர் அவர் தாக்கல் செய்துள்ள புகாரில், எதிரியை புகார்தாரருக்கு நன்கு தெரியும் என்றும், அதனடிப்படையில் கடந்த 23.06.2019 அன்று புகார்தாரர் அவசர தேவைக்காகவும், மற்றும் குடும்ப செலவிற்காகவும் கடனாக ரூ.5,00,000/–த்தை மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.1.00 வீதம் வட்டி சேர்த்து கூடும் வட்டியும் அசலும் வேண்டும்போது திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு எதிரி கடந்த 23.06.2019 ம் தேதியன்றே தனக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார் என்றும், 20.07.2020 என தேதியிட்ட காசோலை எண்.000221 என்ற எண்ணுள்ள ரூ.5,00,000/–க்கான State Bank of India, Vedasandur Taluk Dindigul District, கோவிலூர் கிளை, திண்டுக்கல் காசோலையை தனக்கு கொடுத்தார் என்று கூறியுள்ளார்.

2.2) பின்னிட்டு எதிரி கேட்டுக்கொண்டபடி, எதிரியினால் புகார்தாரரிடம் அளிக்கப்பட்ட காசோலையை 20.07.2020 ம் தேதி புகார்தாரர் கணக்கு வைத்துள்ள Bank of Baroda, கரூர் கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்த போது எதிரியின் வங்கி கணக்கில் " Funds Insufficient " என்ற காரணத்தினால் 21.07.2020 ம் தேதி காசோலை திருப்பப்பட்டதாகவும், தனது வழக்கறிஞர் மூலம் 23.07.2020 ம் தேதி எதிரிக்கு அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பினை 26.07.2020–ம் தேதி எதிரியாகிய நீர் பெற்றுக்கொண்டு விட்டீர் என்றும், பின்னிட்டு, காசோலை தொகையை திருப்பி கொடுக்காமலும் இருந்த காரணத்தால் எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டி புகார்தாரர் இந்த புகாரை தாக்கல் செய்துள்ளார்.

3) புகார்தாரர் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கை மற்றும் குறித்த கால அளவு மற்றும் நீதிமன்ற ஆள்வரை எல்லை ஆகியவற்றை கருத்தில் கொண்ட பின்னர், வழக்கை கோப்பிற்கு எடுக்க முகாந்திரம் இருந்ததால் இந்த வழக்கு கரூர், நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம், அவர்களால் 30.09.2020 ம் தேதி S.T.C.No.514/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப

உத்தரவிடப்பட்டுள்ளது. பின்பு இவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாண்புமிகு முதன்மை குற்றவியல் நடுவர் அவர்களின் 01.07.2023ம் தேதியிட்ட R.O.C. NO.18/2023/A1–ல் பிறப்பித்த உத்தரவின் படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு கடந்த 28.07.2023ம் தேதியன்று S.T.C.2803/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

**4)** குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 204 (3) – ன் படி வழக்கின் நகல்கள் எதிரிக்கு அழைப்பாணையுடன் அனுப்பப்பட்டுள்ளது.

**5)** இந்த வழக்கு, அழைப்பாணை வழக்கு என்பதால் குற்றச்சாட்டுகள் வனையப்படவில்லை. மாறாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றத்தின் சாராம்சம் (Substance of Accusation) குறித்து வினவப்பட்ட போது பொய் வழக்கு என கூறினார்.

**6)** புகார்தாரர் தரப்பில், புகார்தாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு உள்ளது. மேலும், ம.சா.2 ஆக சரவணன் என்பவர் விசாரிக்கப்பட்டு எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**7)** புகார்தாரர் தரப்பு சாட்சியத்திலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது, எதிரி அவற்றை மறுத்து பொய் சாட்சி, பொய்வழக்கு என்றும், எதிரி தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்றும் கூறியுள்ளார்.

**8)** ஆனால், அதன்பின், எதிரி தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவுமில்லை மற்றும் எதிரி தரப்பில் யாதொரு ஆவணங்களும் குறியீடு செய்யப்படவுமில்லை.

**9)** இவ்வழக்கில் முன்வைக்கப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள், வாதங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**<u>10) தீர்மானிக்கப்பட வேண்டியவை</u>**

i). மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138–ன் கீழான அனுமானம் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா?

ii). மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 139–ன் கீழான அனுமானம் எதிரியால் மறுதலிக்கப்பட்டுள்ளதா?

iii). புகார்தாரர் கோரிய பரிகாரம் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா?

**11)** வழக்கின் பொருண்மையை பரிசீலிக்கும் முன், சட்டத்தின் வகையங்களை கவனிக்க வேண்டியுள்ளது. வங்கி பரிவர்த்தனைகளில் நம்பிக்கையை ஏற்படுத்துவதும், மற்றும் வணிக நடவடிக்கைகளில் மாற்றுமுறை

ஆவணங்களுக்கு நம்பகத்தன்மையை ஏற்படுத்துவம் மாற்றுமுறையாவண சட்டம், பிரிவு 138–ன் நோக்கம் ஆகும். காசோலைகள் மூலம் பணம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு மதிப்பளிக்காததில் இருந்து பாதிக்கப்பட்ட நபர்களை ஊக்கப்படுத்துவதாக கருதுகின்றது.

**i). மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138–ன் கீழான அனுமானம் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா?**

**The ingredients of the offence under Section 138 are:**

**(i) Cheque Drawn:**

The drawing of a cheque by person on an account maintained by him with the banker for the payment of any amount of money to another from that account;

**(ii) Legally Enforceable Debt:**

The cheque being drawn for the discharge in whole or in part of any debt or other liability;

**(iii) Cheque Presentation:**

Presentation of the cheque to the bank;

**(iv) Return Unpaid:**

The return of the cheque by the drawee bank as unpaid either because the amount of money standing to the credit of that account is insufficient to honour the cheque or that it exceeds the amount arranged to be paid from that account;

**(v) Written Demand Notice:**

A notice by the payee or the holder in due course making a demand for the payment of the amount to the drawer of the cheque within 30 days of the receipt of information from the bank in regard to the return of the cheque; and

**(vi) Failure to Pay:**

The drawer of the cheque failing to make payment of the amount of money to the payee or the holder in due course within 15 days of the receipt of the notice.

**12)** புகார்தாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள ம.சா.1 மற்றும் ம.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்கள் மற்றும் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலமாக எதிரி, புகார்தாரரிடம் வாங்கியதாக சொல்லப்படும் கடன் தொகைக்கு ஆதரவாக தான் எதிரியால், அவர் பராமரித்து வந்த வங்கி கணக்குரிய இவ்வழக்கு காசோலையை கொடுத்துள்ளார் என்பதும், அதனை புகார்தாரரால் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட போது, எதிரி தனது வங்கி கணக்கை பராமரித்து வரும் வங்கியால் மதிப்பளிக்கப்படாமல் எதிரியின்

வங்கி கணக்கில் "போதிய பணமில்லை" என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது என்பதும், பிறகு, எதிரி மேற்படி விபரத்தை தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பை, எதிரி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதும், அதன்பின்பும் மேற்படி காசோலைக்குண்டான தொகையை செலுத்தி வைக்க தவறிவிட்டார் என்பதும் தெரிய வருகின்றது.

**எனவே, மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138–ன் கீழான அனுமானம் புகார்தாரருக்கு சாதகமாக உள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.**

**ii). மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 139–ன் கீழான அனுமானம் எதிரியால் மறுதலிக்கப்பட்டுள்ளதா?**

**13)** மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138–ன் கீழான மேற்கண்ட உட்கூறுகள் அனைத்தும் முழுமையடைந்திருந்தால் எதிரி குற்றம் செய்ததாக கருதப்படக் கூடியது என வரையறுக்கப்பட்டிருந்தாலும், அதற்கு மாறுதலாக நிரூபிக்காத வரையில் தான், மாற்று முறையாவண சட்டம் பிரிவு 138–ல் சொல்லப்பட்டவாறு காசோலையை வைத்திருப்பவர் சட்டப்படியான கடனின் முழுமைக்கோ அல்லது பகுதிக்கோ அல்லது இதர பொறுப்புகளுக்காக பெற்றுள்ளார் என அனுமானிக்க வேண்டும் என பிரிவு 139–ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

**14)** மேற்படி மாறுதலாக நிரூபிக்கும் வகையானது எதிரியின் வாதத்தின்படி நிகழ்வதற்கு வாய்ப்பு உள்ளது என்ற அடிப்படையில் சாட்சிகளின் குறுக்கு விசாரணை மூலமாகவோ அல்லது சான்றாவணங்களின் மூலமாகவோ சந்தேகத்தை ஏற்படுத்தினால் போதுமானது மாறாக எதிரி தன்னை சாட்சியாக உட்படுத்தி கொள்ள வேண்டியதில்லை என பல்வேறு வழக்குகளில் மாண்பமை உச்சநீதிமன்றம், மாண்பமை உயர்நீதிமன்றங்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**15)** இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்யும் போது, புகார்தாரர் தனது தரப்பு வழக்கை மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138–ன் கீழ் நிரூபணம் செய்துள்ளதாக தெரிய வருகின்றது. அதனை மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 118 மற்றும் 139–ன் கீழ் மேற்படி அனுமானத்தை மறுதலித்து நிரூபிக்க வேண்டிய பொறுப்பு எதிரியை சார்ந்தது ஆகும்.

**16)** அதனடிப்படையில், இவ்வழக்கில் எதிரி தரப்பால் முன் வைக்கப்பட்ட வாதத்தின் பேரில், புகார்தாரரின் வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதா என்பதை பின்வருமாறு பரிசீலனை செய்யப்படுகின்றது.

**17)** எதிரி தரப்பில் ம.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது, எதிரி காந்திகிராமத்தில் உள்ள சுப்பையா மற்றும் சிவக்குமார் என்பவர்களிடம் 14 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கினார் என்றும், எதிரி அரசு ஊழியர் என்பதால் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன், அப்போது மேற்கண்ட நபர்களிடம் கொடுக்கப்பட்ட புரோநோட் மற்றும் காசோலைகளை, பொய்யாக இந்த

வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், புகாரில் தெரிவித்துள்ள படி யாதொரு கடனும் பெறவில்லை, அதற்காக இந்த வழக்கு காசோலை கொடுக்கப்படவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

18) அதனடிப்படையில், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்யும் போது, இவ்வழக்கு ம.சா.ஆ.1 புரோநோட் மற்றும் ம.சா.ஆ.2 காசோலையில் கண்டுள்ள கையொப்பம், எதிரியினுடையது அல்ல என எதிர்வாதம் செய்யப்படவில்லை. புகார்தாரரால் அனுப்பப்பட்ட சட்டப்படியான அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்பு, தனது தரப்பு வாதத்தை பதில் அறிவிப்பு வாயிலாகவோ தெரிவிக்காததற்கான நியாயமான காரணத்தையோ அல்லது இந்த வழக்கு காசோலையை புகார்தாரரிடம் திரும்ப பெறுவதற்கும், இந்த வழக்கில் எதிரி ஆஜரான பின்பு அதற்கு எதிராக, எதிரியால் மேற்கொள்ளப்பட்ட சட்டப்படியான நடவடிக்கைகள் குறித்தும் நிரூபிக்க வேறு யாதொரு சாட்சிய, சான்றாவணங்களையும் எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

19) மேலும், எதிரி தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 ஆகியோர்களை குறுக்கு விசாரணை செய்யும் போது, எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சங்கதியான, சுப்பையா மற்றும் சிவக்குமார் ஆகியோர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகைக்காக தான் இவ்வழக்கு ஆவணங்களான ம.சா.ஆ.1 புரோநோட் மற்றும் ம.சா.ஆ.2 காசோலை என மேற்படி நிகழ்வு நடப்பதற்கான சாத்தியகூறு இருப்பதாக நம்பத்தகுந்த வகையில் எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்டவில்லை. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2–ல் கண்டுள்ள தொகை சட்டப்படியான கடன் அல்ல என்பதை மறுதலிக்கும் வகையில் சாட்சிய, சான்றாவணங்களை எதிரிதரப்பில் முன்வைக்கவில்லை.

20) மேலே கண்டவாறு பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில், புகார்தாரருக்கு ஆதரவான அனுமானத்தை எதிரி தரப்பில் மாறுதலாக நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பதையும் தகுந்த சாட்சி சாண்றாவனங்களின் மூலமாக நிரூபணம் செய்யப்பட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

<u>iii). புகார்தாரர் கோரிய பரிகாரம் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா?</u>

மேற்கண்ட பரிசீலனைகளில் இருந்தும், பிரச்சனை எண்.1 க்கு கண்ட தீர்வில் இருந்தும், எதிரி, புகார்தாரரிடம் பெற்ற கடனுக்காக இவ்வழக்கு காசோலையை கொடுத்து, அதற்கு மதிப்பளிக்காமலும், காசோலைக்குண்டான தொகையை செலுத்தாமலும் இருந்து வந்துள்ளார் என்பது தெரிய வருகின்றது.

எனவே, மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றத்திற்கு எதிரி தண்டிக்கப்பட வேண்டியவர் என்றும், புகார்தாரர் நஷ்ட ஈடு பெற தகுதியானவர் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

21) முடிவில், எதிரி மீது சாட்டப்பட்ட குற்றத்தை வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்கள், குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் மூலம் **தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கிடமின்றி மெய்ப்பிக்கப் பட்டுள்ளதாக தீர்மானித்து,** குற்றம் சாட்டப்பட்டபடி **எதிரி குற்றவாளிதான் என முடிவு செய்து**, மாற்றுமுறை ஆவண சட்டம் 1881 as Amended by the Act 66 of 1988 ன் பிரிவு 138 உ/இ 142 ன் படியான குற்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் படி **ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை** விதித்தும் மற்றும் எதிரியானவர் அபராதமாக **ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்)** செலுத்த வேண்டும் எனவும், அவ்வாறு எதிரியால் மேற்படி அபராதம் செலுத்தப்பட்டால், அதனை புகர்தாரர் உரிய நடவடிக்கை மூலம் கு.வி.மு.ச.357(1)(ஆ)-ன் கீழ் நஷ்ட ஈடாக பெற்றுக் கொள்ளலாம் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. அபராதத்தை கட்டத் தவறினால் 3 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கிற்காக நீதிமன்றக் காவலில் இருந்த காலம் ஏதுமில்லை. இவ்வழக்கில், புகார்தாரருக்கு u/s.143-A of NI Act பிரிவின் படி இடைக்கால பரிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் வருடம், மார்ச் மாதம் 30-ம் நாள் இன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M CHARLES ALBERT
Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.03.30 17:33:25 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**கரூர்.**

**<u>புகார்தாரர் தரப்பு சாட்சி:-</u>**

| | |
|---|---|
| ம.சா.1. | சக்திவேல், த/பெ.ராமசாமி |
| ம.சா.2. | சரவணன், த/பெ.சந்திரன் |

**<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1. | 23.06.2020 ம் தேதி எதிரி மனுதாரருக்கு எழுதிக் கொடுத்துள்ள பிராமிசரி நோட்டின் அசல். |
| ம.சா.ஆ.2. | 20.07.2020 ம் தேதி எதிரி புகார்தாரருக்கு கொடுத்த ரூ.5,00,000/-த்திற்கான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வேடசந்தூர் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம், கோவிலூர் கிளையின் காசோலை எண்.000221 அசல். |

| | |
|---|---|
| ம.சா.ஆ.3. | 21.07.2020 ம் தேதியிட்ட ரிட்டன் மெமோவின் அசல். |
| ம.சா.ஆ.4. | 23.07.2020 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல். |
| ம.சா.ஆ.5. | மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு 26.07.2020 ம் தேதியன்று எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையின் அசல். |

<u>**எதிரி தரப்பு சாட்சி :–**</u>

இல்லை

<u>**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–**</u>

இல்லை

M CHARLES ALBERT

Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.03.30 17:33:52 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**
**கரூர்.**

**S.T.C.No.2803/2023** **நாள்- .03.2026**

**எதிரி**

**T.வள்ளியம்மாள்,**
க/பெ.தமிழரன்

**கேள்வி :–** உமக்கு எதிரான மாற்றுமுறை ஆவண சட்டம் 1881 as Amended by the Act 66 of 1988 ன் பிரிவு 138 உ/இ 142 ன் கீழ் தண்டனை குறித்து நீர் என்ன சொல்ல விரும்புகிறீர் ?

**பதில் :–**